



நாகை மாவட்டத்திற்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மக்கள் திரண்டு வழியெங்கும் உற்சாக வரவேற்பளித்த காட்சி!



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் சர்வதேச விளையாட்டு நகரம் அமைப்பது, தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் அமைப்பது என ஏராளமான திட்டங்கள் தொடர்பான திட்ட விளக்க அறிக்கைகளை நேற்று ஆய்வு செய்து, அவற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிகாரிகள் அலுவலர்களுடன் நேற்று கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித் திட்டத்தின் கீழ், சென்னையில் 5 நாட்கள் நடைபெற உள்ள 2023ஆம் ஆண்டுக்கான மாநில இளைஞர் திருவிழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.08.2023) சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் நா. எழிலன், இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, கல்லூரி கல்வி இயக்குநர் டாக்டர் கீதா. மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித் திட்டத்தின் கீழ், சென்னையில் 5 நாட்கள் நடைபெற உள்ள 2023ஆம் ஆண்டுக்கான மாநில இளைஞர் திருவிழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.08.2023) சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்து, மாநில இளைஞர் திருவிழாவிற்கான இலச்சினையினை (LOGO) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் நா.எழிலன், இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, கல்லூரி கல்வி இயக்குநர் டாக்டர் கீதா. மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியல்:

# திண்டுக்கல் பேராசிரியர்கள் 4 பேர் தேர்வு!

நிலக்கோட்டை, ஆக. 25-

சர்வதேச அளவில் கடந்த 2022ல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முதல் 2 சதவீத விஞ்ஞானிகளின் பட்டியலை அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ஜான் லொன்னிடிஸ் மற்றும் அவரது குழுவினர் வெளியிட்டுள்ளனர். மொத்தம் 22 அறிவியல் துறைகள், 176 துணை துறைகளில் உலகின் சிறந்த விஞ்ஞானிகள் வகைப்படுத்தப்பட்டனர். இந்த விஞ்ஞானிகள், குறைந்தபட்சம் 5 ஆய்வு கட்டுரைகள், புலம் மற்றும் துணை புலம் சார்ந்த சதவீதங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டனர். இந்த பட்டியலில் உலகம் முழுவதும் 2 லட்சத்துக்கும் அதிகமான விஞ்ஞானிகள் இடம் பிடித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து 3,500க்கும் அதிகமான விஞ்ஞானிகள் இடம் பிடித்துள்ளனர். இதில் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி அருகே காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் கணிதவியல் துறை பாலசுப்பிரமணியம், சேதுராமன், வேதியியல் துறை மீனாட்சி, இயற்பியல் துறை மாரிமுத்து ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே 2019, 2020, 2021ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் இடம் பிடித்து, தற்போது நான்காவது முறையாக இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

